தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
திங்கட்கிழமை, மார்ச் 30, 2015

# அகில இந்திய கைப்பந்து: எஸ்.ஆர்.எம். அணி முதலிடம்




சென்னை, நெல்லை பிரண்ட்ஸ் கிளப் மற்றும் டாக்டர் சிவந்தி கிளப் சார்பில் ‘தினத்தந்தி’, பனிமலர், எஸ்.என்.ஜே. குரூப் ஆதரவுடன் 42–வது பி.ஜான் நினைவு அகில இந்திய கைப்பந்து போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்தது. இதன் ஆண்கள் பிரிவில் நேற்று நடந்த இறுதிப்போட்டியில் எஸ்.ஆர்.எம். (சென்னை) அணி 25–15, 23–25, 25–19, 23–25, 15–9 என்ற செட் கணக்கில் கர்நாடகா அணியை போராடி வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது. முன்னதாக நடந்த 3–வது இடத்துக்கான ஆட்டத்தில் மேற்கு ரெயில்வே (மும்பை) அணி 25–20, 25–22, 25–18 என்ற நேர்செட்டில் தமிழ்நாடு போலீஸ் அணியை சாய்த்தது.பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவுக்கு விமான நிலைய பொருளாதார ஒழுங்கு முறை ஆணைய சேர்மன் எஸ்.மச்சேந்திரநாதன் தலைமை தாங்கினார். வருமானவரி முதன்மை தலைமை கமிஷனர் டி.ஜெயசங்கர், தமிழ்நாடு தடகள சங்க தலைவர் தேவாரம், போலீஸ் ஐ.ஜி. டேவிட்சன் தேவஆசிர்வாதம், எஸ்.என்.ஜெ. குழும சேர்மன் ஜெயமுருகன், போஸ் நினைவு மருத்துவமனை இயக்குனர் டாக்டர் அஜித் போஸ், சுங்க இலாகா துணை கமிஷனர் தமிழ்வேந்தன், ஜோம்ஸ் பவுண்டேசன் நிர்வாக இயக்குனர் ஜோன்ஸ், பனிமலர் என்ஜினீயரிங் கல்லூரி இயக்குனர் சக்திகுமார், போட்டி அமைப்பு குழு செயலாளர் ஏ.கே.சித்திரைபாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்கள். சாம்பியன் பட்டம் வென்ற எஸ்.ஆர்.எம். அணிக்கு டாக்டர் சிவந்தி தங்க கோப்பையுடன் ரூ.1 லட்சம் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது. 2–வது இடம் பெற்ற கர்நாடக அணிக்கு ரூ.75 ஆயிரமும், 3–வது இடம் பெற்ற மேற்கு ரெயில்வே அணிக்கு ரூ.60 ஆயிரமும், 4–வது இடம் பெற்ற தமிழ்நாடு போலீஸ் அணிக்கு ரூ.40 ஆயிரமும், பரிசுக்கோப்பையும் அளிக்கப்பட்டன.